# வேற்றுமை என்றால் என்ன?

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்த பெயர்ச்சொல்லுடன் **ஐ, ஆல், கு, இன், அது** போன்ற சொற்கள் இணைந்து அச்சொல்லின் பொருளைப் பல்வேறு வகையாக வேறுபடுத்துகின்றன. இவற்றை **வேற்றுமை** என்பர்.

- வேற்றுமை உருபுகள் இடம் பெற்றுள்ள தொடர்களை **வேற்றுமைத் தொடர்கள்** என்பர்.
- வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை **வேற்றுமைத்தொகை** என்பர்.

## வேற்றுமை விளக்கம்

- இராமன் கண்டான்
- இராம**னைக்** கண்டான்

முதல் தொடரில், **இராமன் என்னும் பெயர்ச்சொல்** அமைந்துள்ளது.

இரண்டாம் தொடரில் அதே பெயர்ச்சொல் இராமனை வேறொருவர் **இராமனைப் பார்த்தார்** எனவும் பொருள் வேறுபடுகிறது.

இராமன் என்னும் பெயரோடு சேர்ந்துள்ள **ஐ என்னும் உருபு** தான் காரணம். இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும்.

***பாவை அண்ணன் பார்த்து***,

*"அண்ணன் எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள்.*

*"இந்த அண்ணன் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்"* ***என்றான் அண்ணன்***.

*"என் அண்ணன் உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணன் என் மீது மிகுந்த அன்பு உண்டு"* ***என்றாள் பாவை***.

மேலே உள்ள பகுதியைப் படித்துப் பாருங்கள். இதில் கூறப்பட்டுள்ள செய்தியைப் புரிந்துகொள்ள இயலாதவாறு ஒரு குழப்பம் உள்ளது அல்லவா? இதே பகுதியைக் கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

***பாவை அண்ணனைப் பார்த்து***,

*"அண்ணா எனக்கு ஓர் உதவி செய்வாயா?" என்று கேட்டாள்.*

*"இந்த அண்ணனால் செய்ய முடிந்த உதவி என்றால் உறுதியாகச் செய்வேன்" என்றான் அண்ணன்.*

*"என் அண்ணனது உள்ளம் எனக்குத் தெரியும். என் அண்ணனுக்கு என் மீது மிகுந்த அன்பு உண்டு"* ***என்றாள் பாவை***.

இப்போது எளிதாகப் பொருள் புரிகிறது அல்லவா?

இரண்டாம் பகுதியில் **அண்ணன் என்னும் பெயர்ச்சொல்** அண்ணனை, அண்ணா, அண்ணனால், அண்ணனுக்கு, அண்ணனது என்றெல்லாம் மாற்றப்பட்டிருப்பதால் பொருள் தெளிவாக விளங்குகிறது.

அண்ணன் என்னும் பெயர்ச்சொல்லுடன் **ஐ, ஆல், கு, இன், அது** போன்ற அசைகள் இணைந்து அச்சொல்லின் பொருளைப் பல்வேறு வகையாக வேறுபடுத்துகின்றன. இவ்வாறு பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை **வேற்றுமை** என்பர்.

இதற்காகப் பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் அசைகளை **வேற்றுமை உருபுகள்** என்று கூறுவர்.

# வேற்றுமை உருபுகள் என்றால் என்ன?

பெயர்ச்சொல்லின் இறுதியில் அமைந்து பொருள் வேறுபாட்டைச் செய்யும் உருபுகளை **வேற்றுமை உருபுகள்** என்பர்.

## வேற்றுமை உருபுகள் யாவை?

- பெயரை வேறுபடுத்திக் காட்டும் உருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும்.
- **ஐ, ஆல், ஆன்,ஒடு, ஓடு, உடன், கு, இல், இன் , அது , கண், உள், மேல், கீழ்** என்பன வேற்றுமை உருபுகள் ஆகும்.

# சொல்லுருபுகள் என்றால் என்ன?

சில இடங்களில் உருபுகளுக்குப் பதிலாக **முழுச்சொற்களே வேற்றுமை உருபாக** வருவதும் உண்டு.
அவற்றைச் **சொல்லுருபுகள்** என்பர்.

### சொல்லுருபுகள் எடுத்துக்காட்டு

- ஓவியர் தூரிகை**யால்** ஓவியம் தீட்டினார் - இதில் **ஆல் என்பது வேற்றுமை உருபாக** வந்துள்ளது.
- ஓவியர் தூரிகை **கொண்டு** ஓவியம் தீட்டினார் - இதில் **கொண்டு என்பது சொல்லுருபாக** வந்துள்ளது.

# வேற்றுமை எத்தனை வகைப்படும்?

இவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

## *வேற்றுமை வகைகள்*

- *முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை),*
- *இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள் வேற்றுமை),*
- *மூன்றாம் வேற்றுமை,*
- *நான்காம் வேற்றுமை,*
- *ஐந்தாம் வேற்றுமை,*
- *ஆறாம் வேற்றுமை,*
- *ஏழாம் வேற்றுமை,*
- *எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)*

*என எண் வகைப்படும்.*

| வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும் | | | |
|---|---|---|---|
| வேற்றுமை | வேற்றுமை உருபுகள் | சொல்லுருபு | பொருள் |

| | | | |
|---|---|---|---|
| முதல் (எழுவாய்) | இல்லை | ஆனவன், ஆவான், ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| இரண்டாம் | ஐ | இல்லை | செயப்படுபொருள் |
| மூன்றாம் | ஆல், ஆன், ஒடு, ஓடு | கொண்டு, வைத்து, உடன், கூட | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| நான்காம் | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை |
| ஐந்தாம் | இல், இன் | இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும் | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது |
| ஆறாம் | அது, ஆது, அ | உடைய | கிழமை |
| ஏழாம் | கண் | - | இடம், காலம் |
| எட்டாம் (விளி) | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |

# முதல் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை):

இயல்பான பெயர் (எழுவாய்) பயனிலையைக் கொண்டு முடிவது **முதல் வேற்றுமை எனவும், எழுவாய் வேற்றுமை** எனவும் வழங்கப்படும். இது வினையையும், பெயரையும், வினாவையும் பயனிலையாகக் கொண்டு முடியும்.

- முதல் வேற்றுமைக்கு உருபு **இல்லை**.

பெரும்பாலான சொற்றொடர்களில் **எழுவாய், செயப்படுபொருள், பயனிலை** ஆகிய மூன்று உறுப்புகள் இடம் பெற்றிருக்கும். எழுவாயுடன் வேற்றுமை உருபுகள் எதுவும் இணையாமல் எழுவாய் தனித்து நின்று இயல்பான பொருளைத் தருவது முதல் வேற்றுமை ஆகும்.

## முதல் வேற்றுமை எடுத்துக்காட்டு

- கண்ணன் வந்தான், பாவை வந்தாள் - **வினைப் பயனிலை**
- அவன் கண்ணன் - **பெயர்ப் பயனிலை**

- அவன் யார்? - **வினாப் பயனிலை**

# இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள் வேற்றுமை) :

பெயர்ச் சொல்லினது பொருளைச் **செயப்படு பொருளாக** வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை ஆகும்.

- **இரண்டாம் வேற்றுமை உருபு ஐ** என்பதாகும்.

## இரண்டாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- வளவன் செய்யுளைப் படித்தான்.

இத்தொடரில் உள்ள **செய்யுள் என்னும் பெயர்ச்சொல் ஐ என்னும் உருபையேற்றுச்** செயப்படு பொருளாக வேறுபடுத்திக் காட்டுகிறது.

- கபிலரைப் பரணர் புகழ்ந்தார்.
- கபிலர் பரணரைப் புகழ்ந்தார்.

இவ்விரு தொடர்களையும் கவனியுங்கள். இரண்டாம் வேற்றுமை **உருபு ( ஐ )** எந்தப் பெயருடன் இணைகிறதோ அப்பெயர் **செயப்படுபொருளாக மாறிவிடுகிறது**. இவ்வாறு ஒரு பெயரைச் செயப்படுபொருளாக வேறுபடுத்திக் காட்டுவதால் இரண்டாம் வேற்றுமையைச் **செயப்படுபொருள் வேற்றுமை** என்றும் கூறுவர்.

இரண்டாம் வேற்றுமை ஆனது,

- **ஆக்கல்** - கரிகாலன் கல்லணையைக் கட்டினான்,
- **அழித்தல்** - பெரியார் மூடநம்பிக்கைகளை ஒழித்தார்,
- **அடைதல்** - கோவலன் மதுரையை அடைந்தான்,
- **நீத்தல்** - காமராசர் பதவியைத் துறந்தார்,
- **ஒத்தல்** - தமிழ் நமக்கு உயிரைப் போன்றது,
- **உடைமை** - வள்ளுவர் பெரும் புகழை உடையவர்

ஆகிய ஆறு வகையான பொருள்களில் வரும்.

# மூன்றாம் வேற்றுமை:

- **மூன்றாம் வேற்றுமை உருபுகள் - ஆல், ஆன்,ஒடு, ஓடு** ஆகியன.
- கருவிப்பொருளில் **கொண்டு** என்னும் சொல்லும், உடனிகழ்ச்சிப் பொருளில் **உடன்** என்னும் சொல்லும் சொல்லுருபுகளாக வரும்

## மூன்றாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

### ஆல், ஆன்

*ஆல், ஆன் என்பவை,*

- ***கருவிப்பொருள்,***
- ***கருத்தாப் பொருள்***

*ஆகிய இரண்டு வகையான பொருள்களில் வரும்.*

**கருவிப் பொருள்**

**முதற்கருவி, துணைக்கருவி** என இருவகைப்படும்.

| முதற்கருவி | துணைக்கருவி |
|---|---|
| **கருவியே செய்யப்படும் பொருளாக மாறுவது முதற்கருவி** | ஒன்றைச் செய்வதற்குத் துணையாக இருப்பது துணைக்கருவி |
| **மரத்தால் சிலை செய்தான்** | உளி**யால்** சிலை செய்தான் |

**கருத்தாப்பொருள்**

ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும்.

| ஏவுதல் கருத்தா | இயற்றுதல் கருத்தா |
|---|---|
| **பிறரைச் செய்யவைப்பது ஏவுதல் கருத்தா** | தானே செய்வது இயற்றுதல் கருத்தா |

| | |
|---|---|
| **கரிகாலனால் கல்லணை கட்டப்பட்டது** | சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. |

## ஆன்

ஆன் என்னும் உருபு பெரும்பாலும் செய்யுள் வழக்கில் இடம்பெறும்.

- புறந்தூய்மை **நீரான்** அமையும்.

## ஒடு, ஓடு

ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் **உடனிகழ்ச்சிப்** பொருளில் வரும்.

## உடனிகழ்ச்சி என்றால் என்ன ?

ஓர் எழுவாயின் செயலுடன் பிறிதொன்றனது செயலும் உடனிகழ்வது உடனிகழ்ச்சிப் பொருள் எனப்படும்.

- தா**யொடு** குழந்தை சென்றது.
- அமைச்ச**ரோடு** அலுவலர்கள் சென்றனர்.

| | |
|---|---|
| நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது | ஆல் |
| தூங்குகையான் ஓங்குநடை | ஆன் |
| தாயொடு மகள் வந்தாள் | ஒடு |
| தந்தையோடு தாய் வந்தாள் | ஓடு |
| தந்தையுடன் தம்பியும் வந்தான் | உடன் |

# மூன்றாம் வேற்றுமை சொல்லுருபு - கொண்டு, வைத்து, உடன், கூட

கருவிப்பொருளில் **கொண்டு என்னும் சொல்லும்,** உடனிகழ்ச்சிப் பொருளில் **உடன் என்னும் சொல்லும்** சொல்லுருபுகளாக வரும்.

- நூல்**கொண்டு** தைத்தான்.
- நூல்**வைத்து** தைத்தான்.
- ஆறுமுக**னுடன்** வள்ளி சென்றாள்.

# நான்காம் வேற்றுமை :

- நான்காம் **வேற்றுமை உருபு கு**.

இது கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல்,பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருள்களில் வரும்.

## நான்காம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- தலைவர் நந்தினிக்குப் பரிசு வழங்கினார்.

நந்தினி என்னும் சொல் கு என்னும் உருபை ஏற்றுப் பொருள் வேறுபடுத்திக் காட்டுகிறது.

| | |
|---|---|
| முல்லைக்**கு**த் தேர் கொடுத்தான் | கொடை |
| புகை மனிதனுக்**கு**ப் பகை | பகை |
| கபிலருக்**கு** நண்பர் பரணர் | நட்பு |
| கவிதைக்**கு** அழகு கற்பனை | தகுதி |
| தயிருக்**கு**ப் பால் வாங்கினான் | அதுவாதல் |
| தமிழ் வளர்ச்சிக்**கு**ப் பாடுபட்டார் | பொருட்டு |

| | |
|---|---|
| செங்குட்டுவனுக்**குத்** தம்பி இளங்கோ | முறை |
| தமிழ்நாட்டுக்**குக்** கிழக்கு வங்கக்கடல் | எல்லை |

## நான்காம் வேற்றுமை சொல்லுருபு - பொருட்டு, நிமித்தம், ஆக

நான்காம் வேற்றுமை உருபுடன் கூடுதலாக **ஆக** என்னும் அசை சேர்ந்து வருவதும் உண்டு. கு உடன் ஆக என்பதும் சேர்ந்து வரும்.

- கூலிக்**காக** வேலை செய்தான்.

'கு'வுக்குப் பதிலாகப் **பொருட்டு**, **நிமித்தம்** என்பன சொல்லுருபுகளாக வரும்.

- கூலியின்**பொருட்டு** வேலை செய்தான்.
- வேலையின்**நிமித்தம்** அயலூர் சென்றான்.

# ஐந்தாம் வேற்றுமை :

ஐந்தாம் **வேற்றுமை உருபுகள் - இல், இன்** என்பன.

- இவை **நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது** போன்ற பொருள்களில் வரும்.

## ஐந்தாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- கொடையில் சிறந்தவர் பாரி - **இல்**
- இந்தியாவின் தெற்கு எல்லை குமரி - **இன்**

| | |
|---|---|
| தலையில் இழிந்த மயிர் | நீங்கல் |
| பாம்பின் நிறம் ஒரு குட்டி | ஒப்பு |
| தமிழ்நாட்டின் கிழக்கு வங்கக்கடல் | எல்லை |
| சிலேடை பாடுவதில் வல்லவர் காளமேகம் | ஏது |

## ஐந்தாம் வேற்றுமை சொல்லுருபு - இருந்து, நின்று, விட, காட்டிலும்

இருந்து, நின்று, விட, காட்டிலும் என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகள் ஆகும்.

- வேலன் ஊரி**லிருந்து** வந்தான் - **இருந்து**
- அரசன் தேரி**னின்று** இறங்கினான் - **நின்று**
- கயல்விழி என்னை**விடப்** பெரியவள் - **விட**
- தமிழைக்**காட்டிலும்** சுவையான மொழி உண்டா ? - **காட்டிலும்**

# ஆறாம் வேற்றுமை:

ஆறாம் **வேற்றுமை உருபு - அது, ஆது, அ** ஆகியவை ஆகும்.

- ஆது, அ ஆகிய உருபுகளை இக்காலத்தில் பயன்படுத்துவது இல்லை.

இவ்வேற்றுமை, உரிமைப் பொருளில் வரும். உரிமைப் பொருளைக் கிழமைப் பொருள் என்றும் கூறுவர்.

## ஆறாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- இராமனது வீடு.
- எனாது வீடு.
- தை, மாசி எனத் தமிழ் மாதங்கள் பன்னிரண்டு

இத்தொடரில் இராமன், என் ஆகிய பெயர்ச்சொற்களுடன் அது என்னும் வேற்றுமை உருபு சேர்ந்து பொருளை வேறுபடுத்துகிறது.

## ஆறாம் வேற்றுமை சொல்லுருபு - உடைய

ஆறாம் வேற்றுமைக்கு **உடைய** என்பது சொல்லுருபாக வரும்.

- என்**னுடைய** வீடு.
- நண்ப**னுடைய** சட்டை.

# ஏழாம் வேற்றுமை:

ஏழாம் வேற்றுமைக்கு உரிய உருபு **கண் ஆகும்.**

- **கால், இல், இடம், உள், மேல், கீழ்** போன்ற உருபுகளும் உண்டு.

**இடம், காலம்** ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களில் ஏழாம் வேற்றுமை உருபு இடம்பெறும்.

## *இல் என்னும் உருபு ஐந்தாம் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும் உண்டு.*

***நீங்கல்*** *பொருளில் வந்தால்* ***ஐந்தாம்*** *வேற்றுமை என்றும்,* ***இடப் பொருளில்*** *வந்தால்* ***ஏழாம்*** *வேற்றுமை என்றும் கொள்ள வேண்டும்.*

- *மாலையில் மலர்கள் - இல்* ***ஏழாம்*** *வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்தது.*
- *மாலையிலிருந்து மலரைப் பிரித்தான் - இல்* ***ஐந்தாம்*** *வேற்றுமை உருபு* ***நீங்கல்*** *பொருளில் வந்தது.*

## ஏழாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- வீட்டின்கண் குழந்தை விளையாடுகிறது - **கண்**
- பெட்டிக்குள் பணம் இருக்கிறது - **உள்**
- கூரையின்மேல் சேவல் உள்ளது - **மேல்**
- கட்டிலின் கீழ் நாய் படுத்துள்ளது - **கீழ்**
- மணியில் ஒலி - **இல்**

இத்தொடரில் வீடு, பெட்டி, கூரை, கட்டில் ஆகிய சொற்களுடன் கண், உள், மேல், கீழ் ஆகிய உருபுகள் சேர்ந்து இடப்பொருளை உணர்த்துகின்றன.

# எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை):

படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளி வேற்றுமை என்கிறோம். இதனை விளி வேற்றுமை என்று அழைப்பர். இது விளிப்பொருளில் வரும்.

- எட்டாம் வேற்றுமை, இதற்கு **உருபு இல்லை**.

இவ்வேற்றுமைக்கு என்று தனியே உருபு கிடையாது. பெயர்கள் திரிந்து வழங்குவது உண்டு.

## எட்டாம் வேற்றுமை எடுத்துக்காட்டு

- கந்தா வா!

இத்தொடரில் கந்தன் என்னும் சொல்லின் **இறுதி (ன்) எழுத்தானது கெட்டு**, **அதன் அயல் எழுத்து (த-தா) என நீண்டு** அழைத்தற் பொருளைத் தருகிறது. இவ்வாறு பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தற் பொருளில் வருவதை விளி வேற்றுமை என்பர்.

- அண்ணன் என்பதை **அண்ணா** என்றும்,
- புலவர் என்பதைப் **புலவரே** என்றும் மாற்றி வழங்குவது எட்டாம் வேற்றுமை ஆகும்.

*முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உண்டு.*

## வேற்றுமை உருபுகள் அட்டவணை

| வேற்றுமை உருபுகளும் அவற்றின் பொருள்களும் | | | |
|---|---|---|---|
| **வேற்றுமை** | **வேற்றுமை உருபுகள்** | **சொல்லுருபு** | **பொருள்** |
| **முதல் (எழுவாய்)** | இல்லை | ஆனவன், ஆவான், ஆகின்றவன் | பயனிலை ஏற்றல் |
| **இரண்டாம்** | ஐ | இல்லை | செயப்படுபொருள் |
| **மூன்றாம்** | ஆல், ஆன், ஒடு, ஓடு | கொண்டு, வைத்து, உடன், கூட | கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி |
| **நான்காம்** | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் | கொடை, பகை, நட்பு, தகுதி, அதுவாதல், |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருட்டு, முறை, எல்லை |
| **ஐந்தாம்** | இல், இன் | இலிருந்து, நின்று, காட்டிலும், பார்க்கிலும் | நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது |
| **ஆறாம்** | அது, ஆது, அ | உடைய | கிழமை |
| **ஏழாம்** | கண் | - | இடம், காலம் |
| **எட்டாம் (விளி)** | இல்லை | இல்லை | விளி (அழைத்தல்) |